# කාර්යසාධන වාර්තාව
# செயற்திறன் அறிக்கை
# Performance Report
# 2019



**අග්‍රාමාත්‍ය කාර්යාලය**
**பிரதம அமைச்சர் அலுவலகம்**
**Prime Minister’s Office**

# செயற்திறன் அறிக்கை
## 2019


பிரதம அமைச்சர் அலுவலகம்
58, சேர் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை
கொழும்பு 07

தொலைபேசி : **011-2575317**
பெக்ஸ் : **011-2574143**
மின்னஞ்சல் முகவரி : info@pmoffice.gov.lk
இணையத்தளம் : www.pmoffice.gov.lk

## பொருளடக்கம்

**தலைப்பு** **பக்க எண்**

**1.** நிறுவனம் தொடர்பான குறிப்பு........................................1

1.1. அறிமுகம்........................................3

1.2. நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணி........................................3

1.3. பிரதான பணிகள்........................................4

1.4. அலுவலகத்தின் நிறுவனக் குறிப்பு........................................5

1.5. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் காணப்படும் விசேட அலகுகள்........................................6

**2.** முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு........................................7

2.1. கொள்கை உருவாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி........................................9

2.1.1. செயற்திறன் பின்னூட்டல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள்........................................9

2.1.2. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் துரிதத் திட்டம்........................................10 - 11

2.1.3. கொள்கை உருவாக்கல் அலுவலகம்........................................11 - 14

2.1.4. மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன கருத் திட்ட அலுவலகம்........................................15

2.1.5. வட மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் விசேட பிரிவு........................................16 - 17

2.2. சர்வதேச ஒத்துழைப்பு விருத்தி........................................18

2.2.1. பிரதம அமைச்சர் அவர்கள் சந்தித்த இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள்........................................18 – 19

2.2.2. பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள்........................................19

2.3. பாராளுமன்றம் மற்றும் சட்டரீதியான அலுவல்கள்........................................18

2.3.1. பாராளுமன்ற அலுவல்கள்........................................20 – 24

2.3.2. சட்டரீதியான அலுவல்கள்........................................24

2.4. தேசிய நல்லிணக்கம் மற்றும் மத அலுவல்கள்........................................25

2.4.1. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம்........................................25 – 32

**தலைப்பு** **பக்க எண்**

2.4.2. சமய அலுவல்கள் ........................................ 32 – 34

2.5. பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல் ........................................ 34 - 36

2.6. தாபன அலுவல்கள் ........................................ 36

2.6.1. உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்காக தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல் ........................................ 36 – 37

**3. 2019 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை ........................................ 39**

3.1. நிதிச் செயலாற்றுகைக் கூற்று ........................................ 41

3.2. நிதி நிலைமை பற்றிய கூற்று ........................................ 42 - 43

3.3. காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று ........................................ 44

**4. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் ........................................ 45**

4.1. நிறுவனத்தின் செயற்திறன் குறிகாட்டிகள் (செயல் திட்டத்திற்கு ஏற்ப) ........................................ 47 – 52

**5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் ........................................ 53**

5.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயற்திறன் ........................................ 55 – 56

**6. மனித வளங்கள் தொடர்பான குறிப்பு ........................................ 57**

6.1. பணியாட்தொகுதி முகாமைத்துவம் ........................................ 59

6.2. மேலதிக பணியாட்தொகுதி அல்லது பணியாட்தொகுதிப் பற்றாக்குறை நிறுவனத்தின் செயற்திறனில் தாக்கம் செலுத்தும் விதம் ........................................ 59

6.3. மனித வளங்கள் அபிவிருத்தி ........................................ 60 - 64

**7. இணக்கப்பாட்டு அறிக்கை.........................................................................65**

7.1. இணக்கப்பாட்டு அறிக்கை.......................................................................67 – 74

**8. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானங்கள் ..........................................75**

8.1. கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானங்கள் .................................77 – 80

# 1. நிறுவனம் தொடர்பான குறிப்பு

## 1.1 அறிமுகம்

பிரதம அமைச்சர் அலுவலகம் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும் நிறுவனம் ஆகும்.

அதற்கேற்ப 2019 ஆம் ஆண்டில் ஜனவரி 01 ஆந் திகதி முதல் நவம்பர் 21 ஆந் திகதி வரை பிரதம அமைச்சர் பதவியை வகித்த கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிகாட்டலின் கீழ் "ஐம்பெரும் செயற்பாடுகள்" எனும் கொள்கைச் சட்டகத்திற்கு ஏற்ப உள்நாட்டுப் பொருளாதாரத்தை முன்னேற்றுதல், ஊழலை ஒழித்தல், சுதந்திரத்தை உறுதிப்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்தல், கல்வியை முன்னேற்றுதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணிகள் செயற்படுத்தப்பட்டன. அதன் பின்பு 2019 நவம்பர் 21 ஆந் திகதி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பிரதம அமைச்சராக நியமிக்கப்பட்டவுடன் தேசிய கொள்கைச் சட்டகமான "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" என்பதில் உள்ளடங்கும் பத்து அம்சக் கொள்கையின் அடிப்படையில்,

- உற்பத்தித்திறன் மிக்கதொரு பிரஜை
- மகிழ்ச்சியாக வாழும் குடும்பம்
- நற்பண்புகள் மிகுந்த, ஒழுக்கமான, நீதியானதொரு சமூகம்
- சுபீட்சமானதொரு தேசம்

ஆகிய நான்கு வகை நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணிகள் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

## 1.2 நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணி

### 1.2.1 தூரநோக்கு

"சுயாதீன, இறைமையுள்ள மற்றும் சௌபாக்கியமிக்கதோர் இலங்கை"

### 1.2.2 செயற்பணி

"இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சிறப்பான ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச பொறிமுறையொன்றிற்கான தலைமைத்துவத்தை வழங்குதல்."

## 1.3 பிரதான பணிகள்

- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்
- கௌரவ பிரதம அமைச்சர் தலைமை தாங்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றிய பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கௌரவ பிரதம அமைச்சரிடம் பாராளுமன்றத்தில் வினவப்படும் வினாக்களுக்கு பதில்களை தயாரித்தல்
- கௌரவ பிரதம அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்
- பிரதம அமைச்சர் அவர்களுக்கு இராஜதந்திரத் தொடர்புகளைப் பேணிச் செல்வதற்கும் அவற்றை விருத்தி செய்வதற்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்.
- பிரதம அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்களுடன் தொடர்பான ஒருங்கிணைப்பு மற்றும் வழிநடாத்தல்
- பிரதம அமைச்சர் கலந்துகொள்ளும் அரச மற்றும் தேசிய வைபவங்கள் மற்றும் விசேட நிகழ்வுகளின்போது ஊடக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- தேசிய மற்றும் சமய வைபவங்கள் மற்றும் சமூக உபசரணை சேவைகளை அரச அனுசரணையுடன் ஏற்பாடு செய்தல்
- பிரதம அமைச்சரிடம் முன்வைக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குறைகளை உரிய நிறுவனங்களிடம் முன்வைத்து நிவாரணத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- அலரி மாளிகை, பிரதம அமைச்சர் அலுவலகம், கௌரவ பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை உரிய முறையில் பராமரித்துப் பேணி வரல்
- பிரதம அமைச்சர் அலுவலகத்தின் அன்றாட நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**1.4** பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிறுவனக் குறிப்பு




2019.12.21 ஆந் திகதி வரை.

## 1.5 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் காணப்படும் விசேட அலகுகள்

- கொள்கை உருவாக்கல் அலுவலகம் - 2019.12.31 ஆந் திகதி வரை இயங்கியது.
- மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன கருத் திட்ட அலுவலகம் - 2019.12.31 ஆந் திகதி வரை இயங்கியது.
- நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் - 2020.03.31 ஆந் திகதி வரை இயங்கும்.

# 2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

## 2.1. கொள்கை உருவாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி

### 2.1.1. செயற்திறன் பின்னூட்டல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள்

செயற்திறன் பின்னூட்டல் மற்றும் மீளாய்வுக் கூட்டங்கள் எனப் புதிய தோற்றத்துடன் 2018 மே மாதம் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கூட்டங்கள் ஊடாக நாட்டில் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களில் மேலெழும் சிக்கல்களைத் தீர்த்தல் மற்றும் அதற்கான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**இந்தக் கூட்டங்களின் நோக்கங்கள் பின்வருமாறு ,**

1) கடந்த கூட்ட அமர்வுகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மூலமான பின்னூட்டலைப் பெற்று தற்போதைய முன்னேற்றம் தொடர்பாகப் பகுப்பாய்வு செய்தல்.

2) தற்போது இனங்காணப்பட்டுள்ள தாமதங்களுடன் கூடிய கருத்திட்டங்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு உதவியளித்து ஏற்புடைய தரப்பினரைச் சந்திக்கச் செய்தல்.

3) நிலவும் சட்டரீதியான சட்டகத்தினுள் முதலீட்டாளர்களின் கருத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு காணப்படும் ஆற்றலைப் பரீட்சித்தல் மற்றும் வழிகாட்டுதல்.

4) இந்தக் கூட்டங்கள் ஊடாக அரச துறை மற்றும் தனியார் துறைக்கிடையே சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கான மேடையொன்றை வழங்குதல்.

அதற்கேற்ப 2019 ஆம் ஆண்டினுள் 09 கூட்ட அமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக கலந்துரையாடப்பட்டு 10 சிபார்சுகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.1.2. நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் துரிதத் திட்டத்திற்கான வழிநடாத்தல் குழு

**"60 மாதங்களில் புதியதொரு நாட்டை கட்டியெழுப்பும் ஐம்பெரும் திட்டத்'' தின்** பிரகாரம் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் துரித திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் ஆலோசகர், பிரதம அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகர் உட்பட வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட செயற் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறை இணைந்து) Public Private Partnership (நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட 04 வீடமைப்புத் திட்டங்கள் முழுமையாகவும், ஒரு திட்டத்தின் வலய இலக்கம் 1 உம் பூரணப்படுத்தப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. கீழ் குறிப்பிடப்படும் திட்டங்கள் தவிர நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட 02 காணிகளில் திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

| | **திட்டம்** | **வீட்டு அலகுகளின் எண்ணிக்கை** | **கருத்திட்டத்தின் பெறுமதி** (ரூபா மில்லியன்) | **முன்னேற்றம்** |
|---|---|---|---|---|
| 01 | கிரீன்வெலி திட்டம் - ஜல்தர | **352** | **1892.8** | 2019.08.12 ஆந் திகதி வீட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. |
| 02 | மவுன்ட் கிளிபர்ட் திட்டம் - ஹோமாகமை | **830** | **6662.85** | வலய இலக்கம் 01 – 2019 செப்டம். 17 ஆந் திகதி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.<br>வலய இலக்கம் 2 இன் வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு வருகின்றன. |
| 03 | சீ பிரீஸ் திட்டம் - வாத்துவை | **196** | **1297.55** | திட்ட வேலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதுடன் வேலைகள் நிறைவடைந்து வருகின்றன. |
| 04 | லவண்யா ஹய்ட்ஸ் திட்டம் - ராகமை | **124** | **750** | |

அத்துடன், வீடமைப்புத் திட்டங்களுக்குத் தேவையான காணிகள், குழாய் நீர், மின்சாரம், பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தை துரிதமாக பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும், பயனாளிகளுக்கு வீடுகளை விற்பனை செய்யும் விலைகளையும் அரசாங்கமே தீர்மானிக்கும். அத்துடன் பயனாளிகளுக்கு வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக அரச வங்கிகளின் ஊடாக சலுகை வட்டி வீதங்களின் அடிப்படையில் கடன் வசதிகளை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வழிநடாத்தல் குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வழிநடாத்தல் குழு பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், கருத்திட்டங்கள் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.

## 2.1.3. கொள்கை உருவாக்கல் அலுவலகம்

2015.10.07ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பின்வரும் நோக்கங்களை முன்னிறுத்தி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் கொள்கை உருவாக்கல் அலுவலகம் தாபிக்கப்பட்டது.

- தேசிய கொள்கைகளை உருவாக்குதல்
- பொருளாதாரம் சார்ந்த கொள்கைகளை மீளாய்வுக்குட்படுத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பகுப்பாய்வு மற்றும் மதிப்பீடு
- தேசிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகளின் உற்பத்தித் திறனை மீளாய்வுக்குட்படுத்தல்
- இலங்கையின் அபிவிருத்தி மீது தாக்கம் செலுத்தும் வெளிவாரியான தாக்கங்கள் மற்றும் இலங்கைக்கு அதனூடாக ஏற்படும் அழுத்தங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளல்.

இதனூடாக கொள்கைகளை உருவாக்கலுடன் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்து அரச கொள்கைகளை மீளாய்வுக்குட்படுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அமுல்படுத்தல் தொடர்பாக பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு அறிக்கைகளை சமர்ப்பித்து அமைச்சரவை அமைச்சர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். அத்துடன், இந்த அலுவலகத்தினால் கீழ் குறிப்பிடப்படும் அலுவல்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

1. தேசிய கொள்கைகளை திட்டமிடல், உருவாக்குதல்
2. பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்புச் செலுத்தும் கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல்

3. அரச துறை மற்றும் அரச நிறுவனங்கள் தொடர்பான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை தயாரித்தல்
4. அரச கொள்கைகள் அமுல்படுத்தப்படுவதனை ஒருங்கிணைத்தல்

**முன்னேற்றம்;**

- முதியோர் உபசரணை சம்பந்தமான வலைதளம் மற்றம் முகாமைத்துவ தகவல் முறைமை உருவாக்கப்பட்டன.
- சிரேஷ்ட பிரஜைகளுக்கான தேசிய கொள்கைகளுக்கு 2019 ஜனவரி மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.
- தனிப்பட்ட சுகாதார இலக்கம் (PHN) வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னோடித் திட்டம் கராபிடிய மற்றும் எல்பிடிய தள வைத்தியசாலைகளில் நிறைவு செய்யப்பட்டது.
- 13 வருட கால உறுதிப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம் 195 பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டன.
- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சியை நோக்கமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு உப குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய தொழிற் தகைமை (NVQ) இன் 04 ஆம் மட்டத்தில் சிறுவர் பாதுகாப்புப் பாடநெறி தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை (VTA) ஆகிய நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்றன.
- இலங்கை வங்கியுடன் இணைந்து செயற்படுத்தப்பட்ட "துருணு திரிய" கடன் திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கான 1000 இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு நிதியுதவி வழங்குவது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், கொள்கை உருவாக்கல் அலுவலகத்தினால் பின்வரும் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

| இல. | துறை | திட்டங்கள் |
|---|---|---|
| 1 | தேசிய கொள்கைகளைத் திட்டமிடல், தயாரித்தல், அபிவிருத்தி செய்தல் | ஆரம்ப / குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான சீர்திருத்தம், முதியோர் உபசரணை உதவிப் பயிற்சித் திட்டம், சுற்றுலாத்துறை நிகழ்ச்சித் திட்டத்தை விருத்தி செய்தல், தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கான பிரதான செயற்திறன் குறிகாட்டியை அறிமுகப்படுத்தல், வணிக சரிசெய்தல், நுண்நிதி தொடர்பான சட்டம், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான ஊக்குவிப்புத் திட்டம், ஆரம்ப சுகாதார சேவைகள், தொழில் வழிகாட்டல், "ஸ்பிரின்ட்" தொழில் வழிகாட்டல், சிறுவர் பாதுகாப்பு மற்றும் நீதி தொடர்பான சட்டமூலம், பெண்கள் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் பகல் நேரக் காப்பகங்கள் சம்பந்தமான தேசிய கொள்கை, சூரிய எரிசக்திப் புரட்சி, மரம் மற்றும் தாவர வணிகப் பயிர்ச்செய்கை தொடர்பான தேசிய கொள்கையை அபிவிருத்தி செய்தல், மூன்றாம் நிலை, தொழில் சார்ந்த மற்றும் கல்வி சார்ந்த பயிற்சிக்காக பெண்கள் உப குழு மற்றம் மூன்றாம் நிலை, தொழில் மற்றும் கல்வி சார்ந்த பயிற்சியை நோக்கமாகக் கொண்ட விசேட நபர்களுக்கான உப குழு, இளம் தொழில் முயற்சியாளர் திட்டம், முச்சக்கரவண்டிகளை ஒழுங்குபடுத்தல் |
| 2 | அரச கொள்கைகள் அமுலாக்கலை ஒருங்கிணைத்தல் | உள்ளக விமான சேவைகள் தொடர்பான சிக்கல்கள், அரச காணித் தகவல்கள் மற்றும் முகாமைத்துவ முறைமையைச் செயற்படுத்தல், சேவையை விட்டுச் செல்லுதல் தொடர்பான கணக்கெடுப்பு, கணனியை அடிப்படையாகக் கொண்ட புகையிரத வலையமைப்பு, வாகனங்களுக்கு அவ்விடத்திலேயே தண்டப் பணம் அறவிடல் முறைமை , மாத்தறை மேல் நீதிமன்றத்தின் தரவு அறிக்கைகளை இலத்திரணியல் கோவைப்படுத்தல், பெண்களின் நல்வாழ்வு பற்றிய கணக்கெடுப்பு, கிராமிய வாரச் சந்தைகளை அபிவிருத்தி செய்யும் ஆரம்ப நடவடிக்கைகள், வன்முறைக்குள் சிக்கிய முதியோர்கள் மற்றும் இளைஞர்களை சமூகமயப்படுத்தல் சம்பந்தமான விசேட வேலைத் |

| | | |
|---|---|---|
| | | திட்டம், வடக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு, வர்த்தக முக்கியத்துவம்மிக்க தாவரங்கள் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான திட்டம், ஊழியத்திற்கான கேள்வி பற்றிய கணக்கெடுப்பு, மின்னியல் வல்லுநர் அனுமதிப்பத்திர சட்டகத்தை நிறுவுதல், தகவல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட காணி மதிப்பீட்டு முறைமை, "வாயுக் கோளத்தின் காபன் உறிஞ்சலுக்கு உலக தாவர விதானம்" திட்டம். |
| 3 | தேசிய கொள்கைகளைத் திட்டமிடல், தயாரித்தல், | யால வனவியல் பூங்காவில் சுற்றுலாப் பயணிகளின் அனுபவங்களை மேம்படுத்துவதற்கான செயல்திட்டம், வாழ்க்கைச் செலவினைக் குறைப்பதன் (அரிசி) கருத்திட்டம், பாதுகாப்பான வலையமைப்பு மீளாய்வு. |
| 4 | இலங்கையின் அபிவிருத்தி மீது தாக்கம் செலுத்தும் வெளிவாரியான தாக்கங்கள் மற்றும் இலங்கைக்கு அதனூடாக ஏற்படும் அழுத்தங்கள் தொடர்பாக கவனத்திற்கொள்ளல் | தகவல் தொழிநுட்பப் பட்டம் (ஒன்லைன்) புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம். |

### 2.1.4 மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபன கருத் திட்ட அலுவலகம்

ஐக்கிய அமெரிக்க குடியரசின் மிலேனிய சவால்கள் கூட்டுத்தாபனத்தின் நிதியுதவியுடன் ஐந்து வருட காலத்திற்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் கீழ் குறிப்பிடப்படும் கருத் திட்டங்களை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**1. காணி நிர்வாகத் திட்டம்**

இந்த செயற் திட்டம் முக்கியமாக காணித் துண்டுகள் பொருத்தப்பாட்டு வரைபடம் மற்றும் அரச காணிகள் ஆவணம் தயாரிப்பு, காணிக் கொள்கை உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பின்போதான அரசாங்கத்தின் ஆற்றலை மேம்படுத்தல், காணி பற்றிய தகவல்கள் முறைமை மற்றும் காணி பற்றிய தரவுகளை மேம்படுத்தலைப் போன்றே உரிமைப் பத்திரங்களை பதிவு செய்யும் நடைமுறை மற்றும் காணிகளை மதிப்பீடு செய்யும் முறையை மேம்படுத்துவதற்காக கம்பஹா, கேகாலை, கண்டி, மாத்தளை, குருநாகல், அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை போன்ற மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**2. போக்குவரத்து அபிவிருத்தி திட்டம்**

இந்தத் திட்டமானது கொழும்பு மாநகர சபை பிரதேசம் உள்ளடக்கப்படும் வகையில் உயர் தரத்திலான மோட்டார் வாகன முகாமைத்துவ முறையொன்றை தாபித்தல், பஸ் வண்டிகள் போக்குவரத்துப் பிரிவை நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் சப்ரகமுவ, ஊவா, வட மத்திய மற்றும் மத்திய மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் தொடர்புபடுத்தப்படும் மத்திய சுற்றுவட்ட பாதையின் 137 கி.மீ. நீளமான பாதையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும் விவசாய உற்பத்திகளின் அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக தனியார் துறை முதலீட்டாளர்களின் பங்கேற்புடன் மத்திய சுற்றுவட்டப் பாதைத் தொகுதியின் குறிப்பிட்ட இடங்களில் விவசாய உற்பத்திகளுக்கான களஞ்சியசாலைகளை தாபிப்பதற்குப் பொருத்தமான இடங்கள் மற்றும் நிதியீட்டை கண்காணித்தலும் இந்த பாதை அபிவிருத்தித் திட்டத்திற்குள் அடங்கும்.

**செயற் திட்டங்களின் நிகழ்கால முன்னேற்றம்**

இறுதி செயற் திட்ட அறிக்கையை தயாரித்து முதலீட்டுக் குறிப்பு மிலேனிய சவால்கள் முதலீட்டு முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு 2018 செப்டெம்பர் மாதத்தில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. செயற் திட்ட ஒப்பந்தம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், 2019 ஒக்டோபர் மாதம் கருத்திட்டம் மற்றும் ஒப்பந்தத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்தது.

## 2.1.5. வட மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வழிநடாத்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் விசேட பிரிவு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த கௌரவ பிரதம அமைச்சர், தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் தொடர்பான அமைச்சர் அவர்கள், 2019 ஜனவரி 08 ஆந் திகதி ஏற்புடைய இரண்டு மாகாணங்களிலும் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிடுவதற்காக இரண்டு குழுக்களை நியமிக்க வேண்டும் என முன்மொழிந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி ஏற்புடைய கருத்திட்டங்களைச் செயற்படுத்துவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதம அமைச்சரின் தலைமையில் 08 பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய வழிநடாத்தல் குழுவொன்று நியமிக்கப்பட்டது. ஏற்புடைய குழுவின் முதலாவது கூட்டம் 2019 ஜனவரி 21 ஆந் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்றது. வடக்கு, மேலும் இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக இனங்காணப்பட்ட பிரச்சினைகளைக் குறிப்புகள் ஊடாக வழிநடாத்தல் குழுவுக்குச் சமர்ப்பிக்கவும் முன்மொழியப்பட்டது.

வீடமைப்பு நிர்மாணம் மற்றும் மீள்குடியேற்றம், சுகாதாரம், கல்வி, சுற்றுலாத்துறை, கடற்றொழில் மற்றும் வீதி அபிவிருத்தி ஆகிய பல துறைகள் உள்ளடங்கும் வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செயற்படுத்துவதற்காக பல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திலும் செயற்படுத்தப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கலந்துரையாடி மீளாய்வு செய்வதற்கு நிரல் அமைச்சுகள் மற்றும் ஏற்புடைய பிரதேச செயலாளர்களுடன் பல கூட்ட அமர்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

10,000 வீடுகளை நிர்மாணித்தல், பிராந்திய வணிக விமான நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான வகையில் யாழ்ப்பாண விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், மட்டக்களப்பு விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், குருநகர், மைலிட்டி, காரைநகர், பருத்தித்துறை ஆகிய மீன்பிடித் துறைமுகங்களை மறுசீரமைத்தல், பனை அபிவிருத்தி நிதியம், இணைந்த வீதி அபிவிருத்தி மற்றும் டெல்ப் தீவில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை அபிவிருத்தி, காணிகளை உரிமையாளர்களுக்கு மீண்டும் வழங்குதல், யாழ்ப்பாண நகர

வடிகாலமைப்புக் கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்கள் இந்தக் கூட்டங்களின்போது செயற்படுத்தப்பட்டதுடன், கலந்துரையாடப்பட்டன. முன்னாள் பிரதம அமைச்சர் அவர்கள் அந்த மாகாணங்களில் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காகவும், சில கருத்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகவும் 2019 ஆம் ஆண்டில் 5 தடவைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்தார்.

மேற்குறிப்பிட்ட முயற்சிகளின் பெறுபேறாக 10,000 வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 4999 வீடுகளின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்திசெய்ய முடிந்தது. யாழ்ப்பாண விமான நிலையத்தின் 1 ஆம் கட்ட நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்தல், 34 000 குடும்பங்களை மீளக் குடியமர்த்தல், குருநகர், மைலிட்டி, ஆகிய மீன்பிடித் துறைமுகங்களை சகல அம்சங்களும் கொண்ட துறைமுகங்களாக மாற்றியமைத்தல், பனை அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பித்தல், பந்தாதிப்பு தேங்காய் எண்ணெய், சுத்தமான தேங்காய் எண்ணெய் மற்றும் எள் உற்பத்தி செய்யும் சிறியளவிலான தொழிற்சாலைகளை ஆரம்பித்தல், மாவட்டப் பொது வைத்தியசாலையில் இதய நோய்கள் மற்றும் சிறுநீரகப் பிரிவொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்றன 2019 ஆம் ஆண்டில் வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொண்ட முக்கியமான வெற்றிகளாகும்.

## 2.2. சர்வதேச ஒத்துழைப்பு விருத்தி

### 2.2.1. பிரதம அமைச்சர் அவர்கள் சந்தித்த இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரமுகர்கள்

| இலக்கம் | திகதி | சந்தித்த இராஜதந்திரிகள் |
|---|---|---|
| 01 | 03.01.2019 | கௌரவ ஜெப்ரி வேன் ஓடன், ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் இலங்கையர்களின் நட்பு மன்றம். |
| 02 | 01.02.2019 | சீசெல்ஸ் நாட்டின் உப ஜனாதிபதி அதிமேதகு வின்ஸ்டன் மெரிடன் |
| 03 | 04.02.2019 | மாலைதீவு ஜனாதிபதி |
| 04 | 21.02.2019 | நோர்வேயின் முன்னாள் பிரதமர் ஜெல் மக்ன அவர்கள். |
| 05 | 22.02.2019 | ஆசிய அரசியல் கட்சிகளின் சர்வதேச மாநாட்டின் பொதுச் செயலாளர் (ICAPP) |
| 06 | 05.03.2019 | நோர்வே வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் இராஜாங்கச் செயலாளர் திருமதி மெரியன் ஹாகன் அவர்கள் |
| 07 | 22.03.2019 | சிங்கப்பூரின் தொலைத்தொடர்பு தகவல்கள் மற்றும் வர்த்தக உறவுகள் அமைச்சர் கௌரவ எஸ். ஈஸ்வரன் அவர்கள் |
| 08 | 23.03.2019 | ஓமானின் கனிய எண்ணெய் மற்றும் வாயு தொடர்பான அமைச்சர் அதிமேதகு மொஹமட் பின் ஹமத் அல் ரம்ஹி அவர்கள் |
| 09 | 25.03.2019 | டீகின் பல்கலைக்கழக அங்கத்தவர்கள் |
| 10 | 09.04.2019 | இந்திய பாதுகாப்புச் செயலாளர் |
| 11 | 27.04.2019 | ஜப்பானின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கௌரவ கென்ஜி ஹராதா |
| 12 | 30.04.2019 | ஐக்கிய நாடுகள் சபையின் நாகரீகம் தொடர்பான அமைப்பின் உயர் பிரதிநிதி மிகுவெல் ஏன்ஜல் மொரடினோஸ் அவர்கள். |
| 13 | 02.05.2019 | ஐக்கிய இராச்சியத்தின் அரச பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பான அமைச்சர் அதிமேதகு பென் வொலஸ் அவர்கள் |
| 14 | 08.05.2019 | மாலைதீவின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ அப்துல்லா சாஹித் அவர்கள் |
| 15 | 10.05.2019 | துருக்கியின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ செதன் ஓனால் அவர்கள் |
| 16 | 04.06.2019 | அவுஸ்திரேலிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ பீட்டர் டடன் |

| | | |
|---|---|---|
| 17 | 07.06.2019 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான நிறைவேற்றுப் பணிப்பாள சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திருமதி மிசேல் கொனின்ஸ் அவர்கள். |
| 18 | 18.06.2019 | அன்சீஸ் டெக்னொலொஜீஸ் / மென்பொருள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களின் இலங்கை சங்கத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர் சுவேன் ஒலாப் ஒல்ஸன் அவர்கள். (SLASSCOM) |
| 19 | 31.07.2019 | உலக முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவினர். |
| 20 | 29.08.2019 | கென்டபர் கோமகன் சங்கைக்குரிய ஜஸ்டின் வெல்பி ஹிமிபாரதுன் அவர்கள். |
| 21 | 10.09.2019 | சவுதி அரேபிய பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ கலாநிதி அப்துல்லா அல் செய்க் அவர்கள். |
| 22 | 18.09.2019 | சீன கமியூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் பணியகத்தின் அங்கத்தவர் மற்றும் சொகிங் நகர சபைக் குழுச் செயலாளர் கௌரவ சென் மைனர். |
| 23 | 19.10.2019 | நெதர்லாந்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ ஸ்டெப் புளொக் அவர்கள். |
| 24 | 04.11.2019 | நியுசிலாந்தின் நீதியமைச்சர் கௌரவ அன்ட்ரூ லிடில் அவர்கள். |
| 25 | 02.12.2019 | பாகிஸ்தான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ மக்தம் ஷா மஹமூத் குரேசி. |
| 26 | 05.12.2019 | மாலைதீவு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ அப்துல்லா சஹீத் அவர்கள். |
| 27 | 13.12.2019 | ஜப்பான் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ மொடெகி தொசிமித்சு. |

### 2.2.2. கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்கள்

| இலக்கம் | திகதி | உத்தியோபூர்வ வெளிநாட்டு விஜயம் |
|---|---|---|
| 01 | 2019.04.23 முதல் 2019.04.25 வரை | சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயம் |
| 02 | 2019.06.12 முதல் 2019.06.14 வரை | சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயம் |
| 03 | 2019.09.02 முதல் 2019.09.04 வரை | மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் (இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொள்ளுதல்) |

## 2.3. பாராளுமன்றம் மற்றும் சட்டரீதியான அலுவல்கள்

### 2.3.1. பாராளுமன்ற அலுவல்கள்

அமைச்சரவை அலுவலகம் மற்றும் பாராளுமன்றத்துடனான ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்காக பிரதம அமைச்சர் அலுவலகம் பின்வரும் பணிகளை ஆற்றுகிறது.

### 01. அமைச்சரவை நிருபங்கள், அமைச்சரவைக் குறிப்புக்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டினுள் பல்வேறுபட்ட விடயங்களுக்காக 60 அமைச்சரவை நிருபங்களும் 29 அமைச்சரவைக் குறிப்புக்களும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அந்த அமைச்சரவைக் குறிப்புகள் மற்றும் நிருபங்களை ஆராய்ந்து அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானங்களில், பிரதம அமைச்சரின் செயலாளரால் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களை செயற்படுத்தல் மற்றும் அவை தொடர்பான பின்னூட்டல் நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 02. பிரேரணை அங்கீகாரங்கள்

ஜனாதிபதியவர்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய பிரேரணைகளைப் போன்றே கௌரவ பிரதம அமைச்சரின் விடயப் பரப்பின் கீழான விடயங்கள் தொடர்பாகவும் பாராளுமன்றத்திற்குப் பிரேரணைகளை முன்வைத்து அங்கீகரித்துக்கொள்வதுடன் தொடர்பான அலுலவல்களும் பிரதம அமைச்சரின் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

அதற்கமைய 2019 ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2019 டிசம்பர் 31 ஆந் திகதி வரை கீழுள்ள பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகரித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரின் சம்பளம் மற்றும் படிகளைத் திருத்தியமைத்தல்.
- 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனச் சட்டம்
- பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

- தீவிவராதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான பிரேரணை

- 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டம்

- கணக்காய்வுத் தலைமை அதிபர் பி.சீ. விக்கிரமரத்ன அவர்களின் சம்பளத்தினைத் தீர்மானித்தல்.

## 03. பாராளுமன்ற வினாக்களுக்குப் பதில் அளித்தல்

➢ பிரதம அமைச்சர் அவர்களினால் ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு ஏற்புடையனவாக எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்களினால் 2019 ஆம் ஆண்டினுள் பிரதம அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட முப்பத்தியிரண்டு (32) வாய்மூல வினாக்களுக்கான பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த வினாக்கள் பின்வருமாறு.

  - ஜனாதிபதியின் விடயப் பரப்பிற்குட்படும் மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் விடயப்பரப்புக்களுக்குட்படும் விடயங்கள் சம்பந்தமாக வினவப்பட்ட இருபத்தியேழு (27) வாய் மூலமான வினாக்களுக்கு பதில் வரையப்பட்டுள்ளன.

  - பிரதம அமைச்சர் அலுவலகத்தின் விடயப் பரப்பிற்குட்படும் விடயங்கள் சம்பந்தமாக வினவப்பட்ட நான்கு (04) வாய் மூலமான வினாக்களுக்கு பதில் வரையப்பட்டுள்ளன.

  - தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் விடயப் பரப்புடன் தொடர்புடைய மற்றும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக வினவப்பட்ட ஒரு (01) வாய்மூல வினாவுக்கான பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.
  - மேற்குறிப்பிட்ட வினாக்களில், பாராளுமன்ற உறுப்பினர்களினால் 12 மேலதிக வினாக்கள் வினவப்பட்டுள்ளதுடன், அந்த வினாக்களை ஏற்புடைய அமைச்சுக்களுக்கு அனுப்பி பதில்கள் வரைவு செய்யப்பட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

➢ பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் பிரதம அமைச்சர் அவர்களுக்கு முன்வைக்கப்பட்ட பத்து (10) வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

➢ தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பாக அனைத்து மாதங்களிலும் பாராளுமன்றக் கூட்டம் இடம்பெறும் முதலாது புதன் கிழமை பிரதம அமைச்சரிடம் கேள்வி கேட்கும் வாய்ப்பின் கீழ் வாய்மூலமான வினாக்கள் 04 க்குப் பதில்கள் வழங்கப்படுகின்றன.

அதற்கமைய 2019.12.31 ஆந் திகதி வரை பதினாறு (16) வாய்மூலமான வினாக்களுக்குப் பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

- பதினான்கு (14) சபை ஒத்திவைப்புப் பிரேரணைகளுக்கு பதில்கள் வரைவு செய்யப்பட்டுள்ளன.

## 04. பாராளுமன்ற அறிக்கைகளைச் சபையில் சமர்ப்பித்தல்

ஜனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோரின் விடயப்பரப்பின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பான அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், விசேடமாக வருடாந்த அறிக்கைகள், செயற்திறன் அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகள் என்பவற்றைப் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுவதுடன், இது வரைக்கும் கீழுள்ள விடயங்களின் கீழ் 30 அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகள் பின்வருமாறு.

- **வருடாந்த அறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| i | தேசிய நிதி ஆணைக்குழு | - | 2017 |
| ii | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | - | 2018 |
| iii | ரணவிரு சேவைகள் அதிகாரசபை | - | 2015 |
| iv | தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு | - | 2014 |
| v | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | 2017 |
| vi | நீதிச் சேவைகள் ஆணைக்குழு | - | 2017 |
| vii | தேசிய பெறுகைகள் ஆணைக்குழு | - | 2017 |
| viii | நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | - | 2017 |
| ix | தேசிய கல்வி ஆணைக்குழு | - | 2014,2015,2016 |
| **x** | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | 2018 |
| **xi** | தேசிய கல்வி ஆணைக்குழு | - | 2017,2018 |

- **முன்னேற்ற அறிக்கைகள்**

| | | |
|---|---|---|
| i | எல்லை நிர்ணய ஆணைக்குழு | 2018 |

- **காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| i | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | இரண்டாவது காலாண்டு அறிக்கை (2018.04.01-2019.06.30) |
| ii | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | மூன்றாவது காலாண்டு அறிக்கை (2019.07.01-2019.09.31) |
| iii | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | முதலாவது காலாண்டு அறிக்கை (2019.01.01-2019.03.31) |
| iv | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு | - | இரண்டாவது காலாண்டு அறிக்கை (2019.04.01-2019.06.30) |

- **செயற்திறன் அறிக்கைகள்**

i தேர்தல் ஆணைக்குழு - 2018

- **செயற்திறன் அறிக்கைகள் மற்றும் நிதியறிக்கைகள்**

i அரசாங்க சேவைகள் ஆணைக்குழு - 2018

- **வருடாந்த அறிக்கைகள் மற்றும் கணக்கு அறிக்கைகள்**

i தேசிய நிதி ஆணைக்குழு - 2018
ii இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு - 2017
iii இலங்கை மன்றக் கல்லூரி - 2018
iv இலங்கை மன்றக் கல்லூரி - 2017
v தேசிய பொலிஸ் ஆணைக்குழு - 2017
vi இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு - 2015

- நிலையியற் கட்டளை (4)119 இன் கீழ் சுயாதீன ஆணைக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தலின் கீழ் கீழுள்ள அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

i இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

ii தேசிய கணக்காய்வு அலுவலகம்

iii கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

iv நிர்வாக அலுவல்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

- **2019 ஆம் ஆண்டுக்கான விதப்புரைகள்**

  தேசிய நிதி ஆணைக்குழு 2019

- **வழிகாட்டல்களைச் சமர்ப்பித்தல்**

  தேசிய பெறுகைகள் ஆணைக்குழு 2018

### 2.3.2. சட்டரீதியான அலுவல்கள்

பிரதம அமைச்சர் அவர்களின் விடயப் பரப்பின் கீழ் வரும் பல்வேறுபட்ட சட்டரீதியான பணிகளுக்கு ஏற்புடைய ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மற்றும் ரீட் வழக்குகள் தொடர்பாக பிரதம அமைச்சரை அல்லது பிரதம அமைச்சரின் செயலாளரைப் பிரதிவாதியாக்கி தொடரப்பட்டுள்ள வழக்கு அலுவல்கள் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளுதல் என்பன பிரதம அமைச்சர் அலுவலகத்தின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, 2019 ஜனவரி 01 ஆந் திகதி முதல் டிசம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் கீழுள்ள வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றம் - அடிப்படை உரிமை வழக்குகள 43

மேன்முறையீட்டு நீதிமன்றம் - ரிட் வழக்குகள் 07

## 2.4. தேசிய நல்லிணக்கம் மற்றும் மத அலுவல்கள்

### 2.4.1. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம்

அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கமைய, 2015 ஆம் ஆண்டில் நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் அடிப்படை நோக்கம், இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாடுகளுடன் தொடர்பான தீர்மானங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாகும்.

**நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஒருங்கிணைப்பு செயலகத்தின் நோக்கங்கள்;**

- நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை செயற்படுத்தல்.
- மோதல்கள் மீண்டும் நிகழாமையினை உறுதிப்படுதி நல்லிணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- ஆற்றல் விருத்தி
- தொடர்பாடல் மற்றும் அணுகுமுறை
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) பிரேரணை இலக்கம் 1/30 : மற்றும் 1/34 உடன் இணைந்து செயற்படுவதனை உறுதிப்படுத்தல்.

**நல்லிணக்கப் பொறிமுறைக்கான செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்**

1. **நிலைமாறுகால நீதிப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தல்.**

➢ காணாமற் போனோருக்கு வழங்கப்படும் "காணப்படாமைக்கான சான்றிதழ்" (Certificate of Absence) தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் (COA).

காணாமற் போன நபர்களின் உறவினர்களுக்கு " காணப்படாமைக்கான சான்றிதழ்" வழங்கும் நோக்கம் அடையப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக வங்கி மற்றும் காப்புறுதித் துறையில் சட்டம் தொடர்பான திணைக்களங்கள் உட்பட ஏனைய அரச அலுவலர்களுக்கு "காணாமற் போதல் தொடர்பான

காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்குவது சம்பந்தமான கருத்தியல்ரீதியான, நடைமுறைரீதியான சிக்கல்கள்" எனும் தலைப்பில் காணப்படாமைக்கான சான்றிதழ் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வொன்று நல்லிணைக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தினால் நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வு 2019 ஜனவரி 31 ஆந் திகதி கொழும்பில் நடாத்தப்பட்டது.

- உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கு அனுசரணை வழங்குதல்.

  உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவொன்றை இலங்கையில் தாபிப்பதற்கு ஏற்புடைய எண்ணக்கருப் பத்திரம் மற்றும் சட்ட வரைவைத் தயாரிப்பதற்கான ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஏற்புடைய அமைச்சரவை நிருபம் 2019 பெப்ரவரி மாதம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

- கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஆலோசனைச் செயலணி ஊடாக வழங்கப்படும் விதந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

  கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (LLRC) மற்றும் ஆலோசனைச் செயலணி (CTF) என்பவற்றினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விதந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றத்தைக் கண்டறிவதற்காக நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தினால் ஏற்புடைய அறிக்கைகள் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுகிறது.

**2. மோதல்கள் மீண்டும் நிகழாமையினை உறுதிப்படுத்தி நல்லிணக்கச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.**

- தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் 2021 – 2017(NHRAP)

தேசிய மனித உரிமைகள் செயல்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அதனைச் செயற்படுத்துவதற்கு ஏற்புடைய முகவர் நிறுவனத்துடன் இணைந்து முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்திற்கு

ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கான செயல்திறன் அறிக்கைகளைத் தயாரிப்பதற்காக 10 துறைக் குழுக்களின் மாதாந்த முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளை ஒன்றுசேர்த்து அறிக்கைகளைத் தயாரிக்கும் பணி நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

விதிக்கப்பட்ட காலச் சட்டகத்தினுள் தேசிய மனித உரிமைகள் செயல்திட்டம் தொடர்பாக அதிக கவனத்தைச் செலுத்தி, அத்திட்டத்தினைத் துரிதமாக செயற்படுத்துவதற்கு ஏற்புடைய துறைக் குழுக்களுக்கு உதவும் வகையில் அந்த துறைக் குழுக்கள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பொறுப்பான மத்திய நிலையங்களை இலக்காகக்கொண்ட செயலமர்வொன்றை ஏற்பாடு செய்வதற்கு நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் நடவடிக்கை மேற்கொண்டது. முன்னணி வளவாளர் குழுவொன்றின் பங்கேற்புடன் இந்த செயலமர்வு 2019 மார்ச் 12 ஆந் திகதி இடம்பெற்றது.

- **கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்**

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு உதவும் நோக்கத்துடன், நிதியமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கிகளைக் கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் உதவி கிடைத்தது. தற்போது செயற்படுத்தப்படும் கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் நிதியமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் முன்வந்தது.

2019 பெப்ரவரி மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வட மாகாண அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் காலச் சட்டகத்தை மேம்படுத்தும் பணிக்கு நிதியமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்க நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் நடவடிக்கை மேற்கொண்டது.

- ஏற்புடைய துறைகள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளுதல்

பெண்கள் எதிர்நோக்கும் நுண்நிதிக் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்புடைய பிரச்சினைகள், இலங்கையில் போரின் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட உள ஆரோக்கிய வீழ்ச்சி தொடர்பான பிரச்சினைகள், நல்லிணக்கச் செயன்முறையில் இலங்கைப் பெண்ணின் வகிபாகம், நிலைமாறுகால நீதி, அங்கவீனமுடைய, மற்றும் விசேட தேவையுடைய நபர்கள் தொடர்பாகவும் சாட்சியாளர்களைப்

பாதுகாப்பது தொடர்பாகவும் ஏற்புடைய தரப்பினரின் உதவியுடன் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தினால் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு வேலைத்திட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் பிரேரணை இலக்கம் 1325 தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட வினாக்கொத்துக்கு ஏற்புடைய அலுவல்களுக்கு பெண்கள் தொடர்பான தேசிய குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

## 3. ஆற்றல் விருத்தி

- குற்றவியல் நீதி நிலைநாட்டல் முறைமையினைப் பலப்படுத்துவதற்காக சட்ட அலுவலர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கான முகவர் நிறுவனத்தின் (JICA) உதவியுடன் நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுக்கு ஜப்பான் அரசின் அனுமதி கிடைத்தது. சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றம், நீதிமன்ற மருத்துவ அதிகாரி, நீதியமைச்சு மற்றும் இலங்கை பொலிசார் போன்ற இலங்கையில் குற்றவியல் நீதி நிலைநாட்டல் தொடர்பான பல்வேறு நிறுவனங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அரச அதிகாரிகளுக்கு ஜப்பானில் பயிற்சியளிப்பதன் ஊடாக குற்றவியல் நீதியை நிலைநாட்டுவதில் காணப்படும் தாமதங்களை குறைத்துக்கொள்ள இதனூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

- நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை (TJR) தொடர்பாக அரச அதிகாரிகளின் அறிவை இற்றைப்படுத்தல்

நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பாக மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கு ஏற்புடைய மேலும் 2 அமைச்சுக்களான தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு மற்றும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு ஆகிய அமைச்சுகளின் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டல் செயலமர்வுத் தொடரொன்று அனுராதபுரம், கொழும்பு, திருகோணமலை, மாத்தறை, கிளிநொச்சி, கண்டி ஆகிய பிரதேசங்களில் 2019 ஜனவரி 21 ஆந் திகதி முதல் மார்ச் 05 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டது. அரச

அலுவலர்களுக்கு போரினால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக உணரச் செய்தல், நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கச் செயன்முறையினை வினைத்திறனுடன் செயற்படுத்துவுது தொடர்பாக அவர்களுக்குக் காணப்படும் கடமைப்பொறுப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் இதன் நோக்கமாகக் காணப்பட்டது.
இந்த செயலமர்வுகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான நிதியம் மூலம் உதவி கிடைத்தது.

- இலங்கை பொலிசாரின் பிரஜைகள் பொலிஸ் குழுக்களுக்குப் பயிலுநர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் மற்றும் இலங்கை பொலிசாருக்கிடையே "தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலை ஊக்குவிப்பது சம்பந்தமாக பிரஜைகள் பொலிஸ் குழு அதிக கவனத்தைச் செலுத்துதல்" தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2018 ஆகஸ்ட் 07 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம், சகவாழ்வுக்கான கலந்துரையாடலை மேம்படுத்துவதற்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்காக செயற்படுவோர் குழுவான்றை உருவாக்குவது இந்த கூட்டுச் செயற்பாட்டின் நோக்கமாகும்.

2019 மார்ச் 31 ஆந் திகதி வரை கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சியுடன் நாடு முழுவதும் 569 அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தவாறு 2019 ஆம் ஆண்டு முழுவதும் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன.

## 4. தொடர்பாடல் மற்றும் அணுகுமுறை

- நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சு ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்புடன் 2019 மார்ச் 12 ஆந் திகதி மொழிக் கணக்காய்வின் முதலாவது கட்டம் இடம்பெற்றது. நாட்டின் பொதுமக்களுக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியன மூன்று மொழிகளிலும் அரச சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலை உறுதிப்படுத்துவது இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

- கம்பஹா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்ட ‘‘அஹன்ன (செவிமடுங்கள்)’’ நிகழ்ச்சித் திட்டத்தின் III ஆம் கட்டம் 2019 செப்டம்பர் மாதம் இடம்பெற்றது.

- பயிற்சியாளர்களுக்கான இராணுவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் (TOT) மற்றும் இராணுவக் கலந்துரையாடல்

  - வெளிநாட்டலுவல்கள் தொடர்பான சுவிற்சர்லாந்தின் பெடரல் திணைக்களத்துடன் இணைந்து இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, இலங்கை பொலிசார், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் அதிகாரிகள் 30 பேருக்கு மலேசியாவில் நடாத்தப்பட்ட 08 நாள் வதிவிடச் செயலமர்வு.

  - நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பாகப் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் - முப்படையினர், , இலங்கை பொலிசார், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றின் அதிகாரிகள் 30 பேருக்கு 05 நாள் வதிவிட நிகழ்ச்சி குகுல்கஹவில் இடம்பெற்றது.

  - நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இராணுவத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியின் 10 மாநாட்டு அமர்வுகள் 2019 ஜூலை 08 ஆந் திகதி முதல் செப்டம்பர் 19 ஆந் திகதி வரை முப்படையினரின், பொலிசாரின், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கனிஷ்ட அதிகாரிகள், மத்திய தரங்களைச் சேர்ந்த அதிகாரிகள், சிரேஷ்ட அத்தியட்சகர் அல்லாத அதிகாரிகள் 800 பேருக்கு நடாத்தப்பட்டு நிறைவுசெய்யப்பட்டது.

- ஊடகச் செயலமர்வுகள்

  - நல்லிணக்கம் தொடர்பாக வெகுசன ஊடகங்களுடன் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் பிரதேச ஊடக செய்தியாளர்களுக்காக 08 செயலமர்வுகள் கொழும்பு, களுத்துறை,

யாழ்ப்பாணம், கண்டி, காலி, அனுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களை மையப்படுத்தி நடாத்தப்பட்டன.

- சமூக ஊடகச் செய்தியாளர்கள் மத்தியில் நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான அறிவினை பரவலாக்குவதனையும், இந்தச் செயன்முறையில் அவர்களுக்கு காணப்படும் பொறுப்பு தொடர்பாக உரையாடலொன்றை ஏற்படுத்துவதனையும் நோக்கமாகக்கொண்டு இரத்தினபுரி, கொழும்பு, களுத்துறை, கம்பஹா, குருநாகல் ஆகிய பிரதேசங்களில் செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்த செயலமர்வுகளுக்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கான நிதியம் மூலம் உதவி கிடைத்தது.

## 5. ஏனைய செயற்பாடுகள்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை இலக்கம் 30/1 மற்றும் 34/1 ஆகியவற்றுக்கு இணங்கிச் செயற்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக PEO Tv தொலைக்காட்சி வலையமைப்பில் மொழிக் கல்வியை வழங்கும் அலைவரிசையொன்றை ஆரம்பித்தல், காணாமற் போனோரின் குடும்பங்கள் எதிர்நோக்க வேண்டியேற்படும் உளரீதியான பாதிப்புகள் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழுவினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் அமர்வுகளில் கலந்துகொள்ளுதல், பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான சட்டத்திற்கு ஏற்புடைய பாராளுமன்ற துணைக் கண்காணிப்புக் குழுவில் கலந்துகொள்ளுதல், இலங்கையில் நல்லிணக்கப் பொறிமுறையைப் பலப்படுத்துவது தொடர்பாக GIZ இனால் நடாத்தப்பட்ட மேசைக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளுதல், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கையில் நிகழும் சிறுவர் திருமணங்கள் தொடர்பான ஆரம்ப ஆய்வுக்குப் பங்களிப்பு வழங்குதல், ருவாண்டாவில் போராட்டத்தின் பின்னரான காலப்பகுதியில் உள நிவாரணத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான கருத்தரங்கொன்றை நடாத்துதல், GIZ இனால் நடாத்தப்பட்ட நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டங்களைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளுக்கு நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் தனது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கியது.

இது தவிர, நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான 20 சமூக ஊடகங்களில் குறுங் காணொளிகளைத் தயாரித்து பிரச்சாரம் செய்தல், நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டும் செயற்பாடு தொடர்பாக பொஸ்னிய மற்றும் ஹர்சகோவினாவின் அனுபவங்களை ஏனைய தரப்பினருடன் பரிமாறிக் கொள்ளுதல், சமூகங்களுக்கிடையே வன்முறை பரவிச் செல்வதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக சிவில் சமூகம் சார்பாக செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல் போன்ற பல செயற்பாடுகளின்போது நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் தனது பங்களிப்பை வழங்கியுள்ளது.

### 2.4.2. சமய அலுவல்கள்

பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகிய சமயங்களுக்கிடையே சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அனைத்து சமயங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் ஓர் பிரதான சமய நிகழ்வொன்றை பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் தேசிய ரீதியாக கொண்டாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய கீழ் குறிப்பிடப்படும் மதம் சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன .

- **தைப்பொங்கல் பண்டிகை**

தைப்பொங்கல் பண்டிகை 2019 ஜனவரி 13 ஆம் திகதி, கௌரவ பிரதம அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது. இந்த வைபவத்தில் எதிர்க் கட்சித் தலைவர் உட்பட பல அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

- **அலரி மாளிகை வளவில் காணப்படும் ஜய ஸ்ரீ மகாபோதி கிளை மரத்தின் அருகே நடாத்தப்பட்ட ஆசிர்வாத போதிப் பூஜை.**

வடக்கு கிழக்கில் மோதல்கள் முடிவுறுத்தப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு மரணித்த இராணுவத்தினருக்கும், 2019.04.21 ஆந் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் காரணமாக மரணித்தவர்களுக்கும் புண்ணியம் கிடைக்கும் வகையிலும், அதில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்தனை புரியும் நோக்கத்துடனும் பிரதம அமைச்சர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் 2019 மே மாதம் 19 ஆந் திகதி பி.ப. 5 மணிக்கு அலரி மாளிகை

வளவில் காணப்படும் ஜய ஸ்ரீ மகாபோதி கிளை மரத்தின் அருகே ஆசிர்வாத போதிப் பூஜை நடாத்தப்பட்டது.
அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆசிர்வாத போதிப் பூஜையில் கலந்துகொண்டதுடன் இந்நிகழ்வு தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

- **"சிசு தம் சரணீ" 2500 பாடசாலை மாணவர்களுக்கான சீலம் காத்தல் நிகழ்ச்சி**

பாடசாலை மாணவர்கள் மத்தியில் நல்லொழுக்கங்களை வளர்க்கும் நோக்கத்துடன், பொசொன் போயாவை முன்னிட்டு மாணவர்களுக்கான சீலம் காத்தல் நிகழ்ச்சியொன்று 2019 ஜூன் மாதம் 14 ஆந் திதி அலரி மாளிகையில் நடாத்தப்பட்டது.
கொழும்பைச் சூழவுள்ள 23 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2500 பாடசாலை மாணவர்கள் உட்பட அந்த பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். தியானம் செய்வது தொடர்பான செயன்முறைப் பயிற்சிகள், மாணவர்களின் நற்பண்புகளை வளர்ப்பதற்கான தர்மப் பிரசங்கங்கள், அர்த்தம் பொதிந்த உரைகளை உள்ளடக்கி இடம்பெற்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டோருக்கு மக்கள் வங்கியினால் அன்பளிப்பொன்றும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

- **கொள்ளுப்பிட்டி, வாலுக்காராம விகாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா**

மதங்களுக்கிடையிலான சகவாழ்வின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் நோக்கில் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கொள்ளுப்பிட்டி, வாலுக்காராம விஹாரையின் வருடாந்த எசல மகா பெரஹரா 56 ஆவது தடவையாகவும் 2019 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது.
வெகு விமர்சையாகக் நடாத்தப்பட்ட இந்தப் பெரஹரா அதிகளவிலான யானைகள், மேல் நாட்டு, கீழ்நாட்டு மற்றும் சப்ரகமுவ கலை சம்பிரதாயங்களுக்குரிய நாட்டிய நிகழ்வுகள் மற்றும் ஏனைய அலங்காரம் மிக்க பல நாட்டியங்களைக் கொண்டமைந்திருந்தது.
அமைச்சர்கள், சிறப்பு விருந்தினர்கள், உள்நாட்டு வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலர் இந்தப பெரஹராவைப் பார்வையிட்டதுடன், இது தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் ஒளிபரப்பப்பட்டது.

- **தர்மப் பிரசங்க நிகழ்ச்சி**

பிரதம அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவுக்கு ஏற்ப, அறிவு ஞானம் மிகுந்த நன்னெறி கொண்ட மக்கள் சமூகமொன்றுக்காக பௌத்த சமயத்தின் போதனைகளைப் பகிர்ந்துகொள்ளும் நோக்கத்துடன், ஒவ்வொரு முழுநோண்மதி போயா தினத்திலும் தர்மப் பிரசங்கமொன்றை நடாத்தும் நிகழ்ச்சி 2019 ஆம் ஆண்டு உந்துவப் முழுநோண்மதி போயா தினம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கேற்ப தர்மப் பிரசங்கத் தொடரின் 192 ஆவது தர்மப் பிரசங்கம் 2019 டிசம்பர் 10 ஆந் திகதி பிரதம அமைச்சர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

சிறந்த தர்மப் பேச்சாளர், கிருலப்பனை எலன் மெதினியாராமையின் சங்கைக்குரிய உடுவே தம்மாலோக தேரர் அவர்களினால் தர்மப் பிரசங்கம் நடாத்தப்பட்டதுடன், பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பணியாட்தொகுதியினர் மற்றும் நாட்டின் பல பாகங்களிலிருந்து வருகை தந்த அதிக எண்ணிக்கையான பக்தர்கள் இந்த தர்மப் பிரசங்கத்தை செவிமடுப்பதில் இணைந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சி தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாகவும் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

## 2.5. பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளுக்கு நிவாரணம் வழங்குதல்

- **பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு கிடைக்கும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை உரிய அரச நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி பின்னூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

பிரதம அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும் பொது மக்களின் முறைப்பாடுகள்/ குறைகளை மிகவும் வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் முகாமைத்துவப்படுத்தும் அடிப்படை நோக்கத்தை முன்னிறுத்தி பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பொதுசன முறைப்பாடுகள் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது.

